

# ஒன்பதாவது சிலை

பாஸ்ராவை ஆண்ட சுலதானுக்குப் பல ஆண்டுகளாகியும் குழந்தைப்பேறு கிட்ட வில்லை. அவன் எப்பொழுதும் தனக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று இறைவனிடம் வேண்டிக்கொள்வான். இறுதியாகக் கடவுளின் அருளால் அவனுக்கு ஓர் ஆண் மகன் பிறந்தான். அவன் அக்குழந்தையை ஜானி என்று அழைத்து வந்தான்.

நாள்கள் சென்றன. ஜானி ஓர் அழகிய வாலிபனாக வளர்ந்து விட்டான். தனது தந்தை இறந்ததும் முறைப்படி அவன் அரியணையில் அமர்ந்தான். ஒருநாள் ஜானி அற்புதமான கனவு ஒன்றைக் கண்டான். தன் தந்தையின் சவக்-குழியைத் தோண்டும்படி யாரோ கூறியது அவனுக்குக் கேட்டது. அவன் தான் கண்ட

கனவைத் தன் தாயிடம் தெரிவித்தான். அவர் சிரித்துக் கொண்டே, "என்னுடைய அருமை மகனே, ஜானி, நீ கனவுகளை நம்பாதே," என்றார். ஆனால், ஜானிக்கு அதில் ஆர்வம் ஏற்பட்டது.

அடுத்த நாள் ஜானி தன் தந்தையைப் புதைத்து வைத்த இடத்தில் தோண்டினான். அவனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அங்கு இறங்கிச் செல்வதற்காகப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. அது ஒரு பெரிய குகையில் சென்று முடிந்தது. குகையில் தங்கத்தால் ஆன அழகிய எட்டுச் சிலைகள் காணப்பட்டன. அதில் ஒரு சிலையின் கையில் ஓர் ஓலைச் சுருள் காணப்பட்டதை ஜானி பார்த்தான். அதில் ஒன்பதாவது சிலை கெய்ரோவில் உள்ளது என்றும், அது இந்த எட்டுத் தங்கச் சிலைகளைக் காட்டிலும் மதிப்பு மிக்கது என்றும் எழுதப்பட்டிருந்தது.

ஜானிக்குத் துணிகரச் செயல்களை நாடிச்

செல்வதில் விருப்பம் அதிகம். அவன் கெய்ரோவிற்குச் சென்றான். அங்கு அவன் காலிப்பைச் சந்தித்தான். அவன் காலிப்பிடம் எட்டுச் சிலைகளைப் பற்றியும், தான் ஒன்பதவாது சிலையைத் தேடி வந்திருப்பதைப் பற்றியும் கூறினான். காலிப் அவனிடத்தில் ஒரு கண்ணாடியை அணியச் சொன்னார்.

"இது ஒரு மாயாஜாலக் கண்ணாடி. இதை உன்னைக் கடந்து செல்லும் பெண்ணின் முன்னால் காட்டினால், யார் தூய்மையானவளோ, அவளது முகம் மட்டும் இதில் தெரியும்," என்றார்.

"ஆனால் ஒன்பதாவது சிலையை எப்படிக் கண்டுபிடிப்பது?" என்று ஜானி கேட்டான்.

"அதைப்பற்றி அவளே உனக்குக் கூறுவாள்", என்று காலிப் கூறினார்.

ஜானி தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

தனக்கு முன் எதிர்ப்பட்ட எல்லாப் பெண்களின் முகங்களுக்கு எதிரே கண்ணாடியைக் காட்டினான். அதில் எந்தப் பிரதிபலிப்பும் தெரியவில்லை.

இறுதியில் அவன் மிகவும் அழகான, தன் கண்ணை விட்டு அகலாத ஒரு பெண்ணைப் பார்த்தான். அவன் அவள் முன்பு கண்ணாடியைப் பிடிக்க அவளுடைய முகம் அதில் தெரிந்தது. உண்மையிலேயே இந்த அழகிய பெண்தான் ஒன்பதாவது சிலை என்பதை ஜானி உணர்ந்து கொண்டான்.

ஜானி அந்த அழகிய பெண்ணைத் தன்னுடன் பாஸ்ராவிற்கு அழைத்து வந்து தன் தாயின் ஆசியுடன் மணந்து கொண்டான்.

**"முயன்றால் முடியாதது எதுவும் இல்லை"**